aglasem.com

FOR KARNATAKA CLASS 12 PREPARATION

Karnataka 2nd PUC Model Question Paper 2027 for Tamil (Paper 5)

EXAM	YEAR	TYPE	SUBJECT
Karnataka Class 12	2027	Sample Paper	Tamil

GOVERNMENT OF KARNATAKA
KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD
6TH CROSS, MALLESHWARAM, BENGALURU - 560 003
2026 -27 II PUC MODEL QUESTION PAPER - 5

SUBJECT : TAMIL (04) **MAXIMUM MARKS: 80**

TIME : 03 HOURS **NUMBER OF QUESTIONS: 55**

மாணவர்களின் கவனத்திற்கு:

1. கையெழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களைச் சரியாக எழுத வேண்டும்

3. கட்டுகரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.

பகுதி - ஒன்று

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக **10X1=10**

1. ஞாலத்தில் மூத்தவள்

அ. தமிழ் மொழி ஆ. ரஷ்ய மொழி

இ. இந்தி மொழி ஈ. துளு மொழி

2. சிறுபஞ்சமூலம் நூலை இயற்றியவர்

அ. கபிலர் ஆ. காரியாசான்

இ. பரணர் ஈ. திருவள்ளுவர்

3. குயிலின் இசை தலைவனுக்கு நினைவு படுத்தியது

அ. தோழி ஆ. அன்னை

இ. தலைவி ஈ. தந்தை

4. சுதந்திர தேவியை என்றும் தொழுதவர்

அ. கண்ணதாசன் ஆ. பாரதிதாசன்

இ. வண்ணதாசன் ஈ. பாரதியார்

5. இரட்சணிய யாத்திரிகம் நூலை இயற்றியவர்

அ. ஈ. ஆ கிருஷ்ணபிள்ளை ஆ. திருத்தக்க தேவர்

இ. இராமலிங்க அடிகளார் ஈ. வீரமாமுனிவர்

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com

6. வியாபாரிகள் தங்கள் தொழிலுக்குத் துணையாக சேர்த்துக் கொண்டனர்

அ. ஆலன் ஆ. ஏபல்

இ. லாரன்சோ ஈ. டாம்னிக்

7. மாலைக் காலத்துக்குரிய இராகம்

அ. இந்தோளம் ஆ. பூபாளம்

இ. சாரங்கம் ஈ. கலியாணி

8. மக்கள் தங்கள் நம்பிக்கை இதன் மீது ஆழமாக வைத்திருக்கிறார்கள்

அ. தெய்வம் ஆ. பண்பு

இ. இன்பம் ஈ. குணம்

9. அசட்டு மூட்டையை கட்டிக் கொண்டு யவனத்திலிருந்து வந்தவன்

அ. சாத்தன் ஆ. மூபாங்கோ

இ. பைலார்க்கஸ் ஈ. அலெக்ஸாண்டர்

10. எல்லா பாவங்களையும் கழுவுவதற்காக காசிக்கு சென்ற பண்ணக்காரன் அங்கிருந்து திருடிக் கொண்டு வந்தது

அ. தோடு ஆ. வளையல்

இ. கொலுசு ஈ. சங்கிலி

II. கோடிட்ட இடங்களை நிரப்புக: **5X1=5**

11. உடையார் எனப்படுவது _____. (ஊக்கம் / செல்வம்)
12. கண்ணகியின் முன் தோன்றி முற்பிறவியை உரைத்த தெய்வம் (மதுராபதி/வளையாபதி)
13. பெரியார் காந்திஜியை _____ சந்தித்தார். (டெல்லியில் / பெங்களூரில்)
14. திருக்குறள் உள்ளடக்கத்தில் பழமையும் விரவி கிடக்கின்றன. (புதுமையும் / கசப்பும்)
15. சுயநலம் சிறுகதையில் வேலப்பன் _____ வியாபாரம் செய்து வந்தான். (கட்டில் / தொட்டில்)

III. **பொருத்துக:** **5X1=5**

16. (அ) மலையின் முடி - பூம்புகார்
17. (ஆ) முல்லை நிலம் - மருதூர்
18. (இ) மருத நிலம் - பெரும்பாலை
19. (ஈ) நெய்தல் நிலம் - பழவேற்காடு
20. (உ) பாலை நிலம் - கோடு

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com

பகுதி - இரண்டு

பிரிவு - 1

அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: 2X2=4

21. நாம் எதைப் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும் என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்?
22. வயிரம் பாய்ந்த மரம் போல் நிலைபெறும் மூன்று பொருள் பற்றித் திரிகடுகம் கூறுவது என்ன?
23. ''எத்தகைய வைகறைகள் வர வேண்டும் என்று கவிஞர் மேத்தா கூறுகிறார்?

பிரிவு - 2

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக 2X2=4

24. பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணத்தைப் பற்றி எழுதுக
25. அறிவு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்பது குறித்து ஜீவா அவர்கள் என்ன கூறுகிறார்?
26. ஓவியக் கலையின் வகைகளை எழுதுக

பிரிவு - 3

இ. ஏதேனும் ஒரு வினாவிற்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக 1X2=2

27. யோஷிகியைப் பற்றி ஆசிரியர் ஜானகிராமன் என்ன கூறுகிறார்?
28. முருகேசனுக்குச் காய்ச்சல் வந்தால் என்ன செய்துக் கொள்வான்?

பகுதி – மூன்று

எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக 3X3=9

29. '' கடவுள் என்றுலகம் போற்றும்
    கருணையைக் கருத்தில் வைப்பாம்!''
30. '' மனித நியாயத்தில் பூமியைச் சுழற்றச்
    கைகளை இயக்கும் காலம் இதுதான்!''
31. ''பொது வாழ்வின் கொள்கைகளையும் அவற்றின் ஆழமான ஈடுபாட்டையும் வலுப்படுத்திக் கொண்டார்.''
32. '' அவன் ஒரு யுகத்திற்கு மட்டும் உரியன் அல்லன்; அவன் எல்லா யுகங்களுக்கும் எக்காலத்திற்கும் உரியவன்''
33. ''ஆசையா வாழ்ந்த பொண்டாட்டி மதிக்க மாட்டோங்கிறா?''
34. ''வா மகளே வா, பூமி தாயி ஓடம்புலேருந்து தண்ணியா பொங்கி வா''

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com

பகுதி - நான்கு

பிரிவு - 1

அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **2X4=8**

35. ஐங்குறுநூற்றுத் தலைவியின் காதல் மாண்பும் அற பண்பும் ஒருங்கே சிறக்கும் தன்மையை விவரித்து எழுதுக
36. 'ஊக்கமுடைமை' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக
37. உள்ளத்தில் காண்பாய் என்னும் கவிதையில் தலைவியின் வினா மற்றும் தோழியின் விடை குறித்து எழுதுக
38. ''பிள்ளைக் கலி தீர்த்த பெருமானே கண்ணுறங்கு'' என்னும் நாட்டுப்புற பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக

பிரிவு - 2

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **2X4=8**

39. ஜான் கீட்ஸ் ''மனிதப் பருவங்கள்'' என்ற கவிதையில் கூறுவனவற்றை எழுதுக
40. அறிவியல் மூலம் இரைச்சலின் அளவை எவ்வாறு குறைக்கலாம்? விளக்கம் தருக
41. ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஊர்கள் பற்றிய செய்திகளை எழுதுக
42. ''உயர்ந்த ரகம்'' நாடகத்தில் உயர்ந்த ரகத்திற்கு ஏற்றாற் போல் அமைக்கப்பட்ட கதாபாத்திரம் பற்றி எழுதுக

பிரிவு - 3

இ. ஏதேனும் ஒரு வினாவிற்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **1X4=4**

43. வேலப்பன், தன் வேலை நீக்கத்தை முதலாளி மாதவராயர் இடம் புகார் செய்த பிறகு நிகழ்ந்தவற்றை எழுதுக:
44. மஞ்சனாத்தி மலையில் வரும் சிறுமியின் மனம் லேசாகியது என்று கூறுவதன் பின்னணியை எழுதுக:

பகுதி - ஐந்து

பிரிவு - 1

அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக **1X4=4**

45. ''நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்த தன் கோயிலே எய்துவாளெனப்
பாய்ந்தனள்'''

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com

பிரிவு - 2

ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக **4X2=8**

46. சேர்த்து எழுதுக

(அ) பெறல் + அரிது = (ஆ) அஃது + இல்லா =

47. பிரித்தெழுதுக

(அ) ஆங்கவன்= (ஆ) அறக்கதிர்=

48. எதிர்ச்சொல் எழுதுக

(அ) மாதர் X (ஆ) போர் X

49. இலக்கணக் குறிப்பு எழுதுக

(அ) கருணைக் கடல்- (ஆ) பெருமலை-

50. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக

(அ) இந்த சிட்டியில் மால்ஸ் சூப்பரா இருக்குது.

(ஆ) டமில் க்ளாஸ் வெரி ன்டெஸ்டிங்கா இருந்தது.

51. கீழ்வரும் சொற்களின் பொருளுணர்ந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக

(அ) விண்ணுக்கும் மண்ணுக்கும்

(ஆ) அண்டம்

பகுதி - ஆறு

பிரிவு - 1

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக **1X5=5**

52. "குடிப்பழக்கம் அனைத்து தீமைகளுக்கும் வழிவகுக்கும்" இக்கூற்றை கொண்டு ஒரு கட்டுரை எழுதுக

அல்லது

53. இனி வரும் காலங்களில், சூரிய ஒளியைக் கொண்டு பெறப்படும் மின்சாரமே மக்கள் பயன்பாடுகளில் மிகுதியாகும் என்பது குறித்து ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக

பிரிவு - 2

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக **1X4=4**

54. உன் வீட்டில் மாடித் தோட்டம் அமைத்ததையும், அதன் சிறப்புகள், பயன்கள் குறித்தும் உன் தோழன்/ தோழிக்கு கடிதம் ஒன்று எழுதுக

அல்லது

55. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளை தமிழில் மொழி பெயர்த்து எழுதுக:

1. Where there is the will there is a way.
2. Think everybody alike.
3. Youth and age will never agree.
4. Honesty is the best policy.

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com